DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRAT COURT NO. II, VILLUPURAM

| CC.286/2022 | | | |
|---|---|---|---|
| Prosecution Witness: 1 | | | |
| Name | ஐயப்பன் | Caste | |
| Father's Name/ Husband Name | விஜி | Religion | |
| Village | வழுதாவூர் | Age | 21 |
| Taluk | | | |
| A1 to A4 present. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2023

சாட்சியை கண்டமங்கலம் தலைமை காவலர் 1311 திருமதி.பிரபாவதி நீதிமன்றத்தில் சாட்சியாக அடையாளம் காண்பித்தார்.

**முதல் விசாரணை**

(அ) நான் தற்போது வழுதாவூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எதிரிகள் எனது உறவினர்கள். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது தந்தை விஜி மற்றும் தாயார் அன்பழகி ஆகியோர்கள் என் வீட்டருகே நின்றிருந்தபோது அங்கு கூட்டமாக இருந்தது. அதனை வேடிக்கை பார்க்க சென்ற எங்களை அங்கிருந்தவர்கள் யாரோ அசிங்கமாக பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்தார்கள். சம்பவம் நடைபெறும்போது கூட்டமாக இருந்ததால் யார் எங்களை அசிங்கமாக பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று எங்களுக்கு தெரியாது. எனக்கு வெளிக்காயம் ஏற்படடாததால் நான் மருததுவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. சந்தேகத்தின்பேரில் எதிரிகள் மீதுபுகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அதசாஆ.1 ஆகும். போலிசார் விசாரணை செய்யவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அதகுவி**

தற்போது நானும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். கடந்த 20.11.2020ம் தேதி காலை 8.30 மணியளவில் எதிரிகள் எங்கள் வீட்டருகே நின்றுகொண்டு எங்களை பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றாலும், அதை கேட்க

சென்ற எனது தந்தையை 1வது எதிரி அசிங்கமாக பேசி கீழே இருந்த செங்கல்லால் எனது தந்தையின் வலது பக்க காதில் அடித்தார் என்றாலும், தடுக்க வந்த எனது தாயாரை எதிரி திருமாவளவன் அசிங்கமாக பேசி தடியால் தலையில் அடித்தார் என்றாலும், தடுக்க சென்ற என்னை எதிரி திருமாவளவன் அதே தடியால் கை மற்றும் தோள்பட்டையில் அடித்தார் என்றாலும், எதிரி ஆகாஷ் தடியால் என் அம்மாவின் வாயில் அடித்தார் என்றாலும், எதிரி தமிழ்மணி தடியால் என் அப்பாவின் முதுகிலும், என் அம்மாவின் காலிலும் அடித்தார் என்றாலும், பின்பு எதிரிகள் எங்களை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை குறித்து புகாரிலும், போலிசார் விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை.

Taken down by me/before me interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-V.Akila)
Judicial Magistrate No.II,
Villupuram